

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.09.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின் கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணையதளத்தினையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைச் செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், தமிழ்நாடு மின்னணு நிறுவன செயல் இயக்குநர் எஸ். அருண் ராஜ், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பி.சி. நாகசுப்பிரமணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.09.2023) தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் அரசு சமுதாய உடல்நல மையத்தைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.





கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பல்வேறு துறைகளின் கீழ் 3,642 பயனாளிகளுக்கு 42 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான டிராக்டர் இயந்திரங்கள், அதி திறன் மின் மோட்டார்கள், மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் செய்ய ஆவின் பாலகம், தொலைபேசி போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.





கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக கிருஷ்ணகிரி நகருக்கு வருகை தந்தபோது கழகத்தினர், பொதுமக்கள் சாலையின் இருமருங்கிலும் திரண்டு சிறப்பான வரவேற்பளித்தனர்.

### டெங்கு-மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கை:

# அக்டோபர் 1 அன்று 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

*தேனி, செப்.28-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் வருகிற அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி நடைபெறும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்துள்ளார்.*

*தேனி மாவட்டத்தை சேர்ந்த வடிவேல் (வயது 43) அவர்கள் விபத்தில் மூளை சாவு அடைந்து அவர் உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அவருக்கு அரசு மரியாதை செலுத்துவதற்காக தேனி மாவட்டம் செல்லும் வழியில் மதுரை விமான நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-*

*தமிழ்நாட்டில் தற்போது அதிக மழைப்பொழிவு காரணத்தினால் பருவமழை கால நோய்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக டெங்கு மற்றும் காய்ச்சல் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக சற்று அதிகரித்து காணப்படுகிறது. மதுரை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துகுடி, காஞ்சிபுரம், திருவாரூர், கோவில்பட்டி, செய்யார், கடலூர், செங்கல்பட்டு, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் அதிகரித்துள்ளது.*

*காய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அந்தந்த பகுதிகளிலேயே பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு தமிழகம் முழுவதும் அனைத்து இடங்களிலும் குறைந்தது 1000 காய்ச்சல் தடுப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவ குழுவினர் தினந்தோறும் காய்ச்சல் பாதித்த இடங்களுக்குச் சென்று ஆங்காங்கே மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்த உள்ளனர். மேலும் இந்த முகாம்களில் பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் பொருட்டு நில வேம்பு குடிநீர் கஷாயம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் பொதுமக்களுக்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் இந்த காய்ச்சல் முகாம்களுக்காக தமிழகத்தில் 476 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஈடுபடுவார்கள்.*

*மேலும் 805 RBSK நடமாடும் பள்ளி மருத்துவ குழுக்கள் பள்ளிகளில் காய்ச்சல் கண்டறியும் முகாம் ஏற்படுத்தப்பட்டு அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் பரிசோதிக்கப்பட்டு காய்ச்சல் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் மாணவர்களுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*மேலும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு காய்ச்சல் கண்ட மாணவர்களின் விவரத்தை உடனடியாக அருகில் உள்ள மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தவிர பள்ளி வளாகங்களில் ஏடீஸ் கொசுக்கள் வளராமல் தடுக்க கொசுப்புழு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் புகை மருந்து அடிக்கவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.*

*அனைத்து சத்துணவு மையங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யவும் சத்துணவு மையங்களிலும் கொசு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*எனவே பொதுமக்கள் அச்சமின்றி காய்ச்சல் ஏற்பட்டவுடன் உடனடியாக அருகில் உள்ள காய்ச்சல் தடுப்பு முகாம்களுக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*காய்ச்சல் உள்ளவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை மேற்கொள்ளவும், சுய சிகிச்சை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று தெரிவித்தார்.*



நாகை மாவட்டம் செருதூர் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 5 பேர் வேதாரண்யம் அருகே கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்த போது இலங்கையைச் சேர்ந்த கடற்கொள்ளையர்கள் தாக்கி பொருட்களை பறிமுதல் செய்தனர். தாக்குதலில் காயம் அடைந்த மீனவர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள நாகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் நேரில் சென்று நலம் விசாரித்து நிதி உதவி வழங்கினார். உடன் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், சிக்கல் என்.ஆனந்த், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், மீனவர் பிரதிநிதி செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (26.09.2023) வனத்துறை அமைச்சர் மரு.மா.மதிவேந்தன் தலைமையில் மாநில வன உயிரின வாரியத்தின் எட்டாவது ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) சுப்ரத் முஹபத்ர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.